செ.வெ.எண்: 07/மார்ச் நாள்: 03.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் வேளாண்மை துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மட்டியரேந்தல், உலையூர், கோடாரேந்தல், மேலக்கன்னிச்சேரி ஆகிய கிராமங்களில் வேளாண்மைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் இன்று (03.03.2016) ஆய்வு செய்தார்.

முதலாவதாக முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மட்டியரேந்தல் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் தலா ரூபாய் 49 ஆயிரத்து 990 மதிப்பில் திரு.ஜபமாலை இருதயராஜ், திரு.ஜோசப்பல்தாசர் ஆகிய விவசாயிகள் மூலம் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்பு உலையூர் கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் திரு.பாலகிருஷ்ணன் என்ற விவசாயி மூலம் அமைக்கப்பட்டுள்ள நெல் தொகுப்பு செயல் விளக்கம் மற்றும் விதைப்பண்ணையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து கோடாரேந்தல் கிராமத்தில் அணுசரனை ஆராய்ச்சி திடல் திட்டத்தின் கீழ் திரு.அந்தோனி சாமி என்ற விவசாயி பயிரிட்டுள்ள பருத்தி பயிர்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளிடம் தாங்கள் மேற்கொள்ளும் விவசாய பணிகளில் ஏற்படும் சிரமங்களையும், அவர்தம் குறைகளையும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வெள்ளைச்சாமி, துணை இயக்குநர்கள் திரு.எஸ்.சுப்பிரமணியன், திரு.அரிவாசன், உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**